# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் - 638 183.



# ஆண்டுமலர்

## 2006-2007

Scanned with CamScanner


# மலர்க்குழு

திரு.மா.ஜெகநாதன் எம்.எஸ்.சி., எம்.பில்., எம்.எட்., முதல்வர் (பொறுப்பு)

முனைவர்.வெ.கலைச்செல்வி எம்.ஏ., எம்.எட்., எம்.பில், பி.எச்.டி, (தமிழ் விரிவுரையாளர்)

சு.கிருஷ்ணவேணி (ஆண்டு மலர் செயலர்)

Scanned with CamScanner



மாண்புமிகு தமிழக முதல்வர்

திரு. டாக்டர். **கலைஞர்.மு. கருணாநிதி** அவர்கள்

Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் - 638 183

### நாமக்கல் மாவட்டம்.

## ஆண்டறிக்கை

கல்லூரி ஆண்டு விழாச் சிறப்பு விருந்தினர் அவர்களே! பேராசிரியப் பெருமக்களே! அலுவலக அன்பர்களே! இனிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் இக்கல்லூரியின் 52-வது ஆண்டு விழா, விளையாட்டுவிழா மற்றும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழா ஆகிய முப்பெரும் விழாவிற்கு வரவேற்று இவ்வாண்டு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறேன்.

**கல்லூரியின் வரலாறு**

இக்கல்லூரி 1955-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பேராசிரியர் திரு.வி.சி.டைட்டஸ், எம்.ஏ.,எல்.டி., அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. குமாரபாளையத்திலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் ஒரு பகுதியாக இயங்கி வந்த இக்கல்லூரி 1972-ஆம் ஆண்டில் புதியதாகக் கட்டடம் கட்டப்பெற்றபின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரியில் 1959-ஆம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பும், 1974-ஆம் ஆண்டு எம்.எட் பகுதி நேர வகுப்பும் தொடங்கப்பெற்றன.

1982-ஆம் ஆண்டு பகுதி நேர வகுப்பாய் இருந்த எம்.எட் பட்டவகுப்பு முழுநேர வகுப்பாக மாற்றப்பட்டது. அரசாணை எண். G.O.M.S. No. 543 Dt. 16.04.1990 ஆணையின்படி நமது கல்லூரி CTE அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு அந்தக் கல்வியாண்டிலேயே இக்கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்க அனுமதி வழங்கப்பட்டது. கல்லூரி மாணவ, மாணவியர்கள் தங்கிப் படிக்க ஏதுவாக 1990-91 கல்வியாண்டில் இருபாலருக்கும் தனித்தனியே விடுதிகள் கட்டப்பட்டன. மேலும், இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி இக்கல்லூரி வளர உறுதுணையாய் இருந்த ஜே.கே.கே. மற்றும் எஸ்.எஸ்.எம். குடும்பத்தாருக்கும், முன்னாள் முதல்வர்களுக்கும், பெரியோர்களுக்கும் இக்கல்லூரியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

Scanned with CamScanner

## கல்லூரி மாணவர் சேர்க்கை

இக்கல்லூரியில் பி.எட்., பட்டப்படிப்பு பயில்வதற்காக 105 மாணவர்களுக்கு இக்கல்வி ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு பி.எட். வகுப்பில் சேரும் பொருட்டு 11,104 மாணவ மாணவியர் விண்ணப்பித்திருந்தனர். கல்லூரிக் கல்வி இயக்குநரின் வழிகாட்டல் நெறியின்படி நுழைவுத்தேர்வு அடிப்படையில் 105 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்கல்லூரி 1998-99 முதல் பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று இயங்குகிறது. மேலும், இக்கல்லூரி தேசிய ஆசிரியர் கல்விக் கழகத்தால் (NCTE Bangalore) அங்கீகரிக்கப்பட்டது.

## மாணவர் மன்றங்கள்

இவ்வாண்டு கீழ்க்கண்ட அனைத்து மன்றங்களின் பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு, ஒற்றுமை உணர்வோடும் பொறுப்போடும் செயல்பட்டு வந்துள்ளனர் என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

| | |
|---|---|
| 01. மாணவர் தலைவர் | - கதிர்வேல்.எஸ் |
| 02. மாணவர் துணைத்தலைவர் | - அருணா காயத்ரி.மு |
| 03. ஆசிரியர் மன்றச் செயலர் | - கோபால்.மு |
| 04. விளையாட்டுத்துறைச்செயலர் | - அரிதாஸ்.கு |
| 05. சமூகப்பணி மன்றச்செயலர் | - லெனின் பாரதி.க |
| 06. ஆண்டு மலர் செயலர் | - கிருஷ்ணவேணி.சு |
| 07. கைக்கலைத்துறைச்செயலர் | - விசுக்குமார்.வி |
| 08. கேள்வி காட்சி கல்விச் செயலர் | - பாக்கியராஜ்.எம் |
| 09. பதிவேட்டுத்துறைச்செயலர் | - கணேஷ் மூர்த்தி.து |
| 10. உயிரியல் துறைச்செயலர் | - சுமதி.எம் |
| 11. பொருளறிவியல் துறைச்செயலர் | - விஜயகுமார்.எஸ் |
| 12. கணிதத்துறைச்செயலர் | - அன்வர் மீரான்.ஏ |
| 13. ஆங்கிலத்துறைச்செயலர் | - சூர்யபிரதா.டி |
| 14. தமிழ்த்துறைச்செயலர் | - காளீஸ்வரி.அ |
| 15. வரலாற்றுத் துறைச் செயலர் | - சத்திய நாராயணன்.எஸ் |
| 16. நூலகத்துறைச்செயலர் | - சுதா.கு |

Scanned with CamScanner

## கற்பித்தல் பயிற்சி

இவ்வாண்டு இக்கல்லூரி மாணவர்களுக்காக உற்றுநோக்கல் மற்றம் கற்பித்தல் பயிற்சிகளுக்கு வழக்கம்போல் ஆறு வாரங்கள் ஒதுக்கப்பட்டன. இதற்கு, முன் பயிற்சியாக நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி இக்கல்லூரியில் வழங்கப்பட்டது. உற்று நோக்கல் பயிற்சி 05.10.2006 முதல் 11.10.2006 வரையிலும், பெருகக் கற்பித்தல் பயிற்சி 01.11.2006 முதல்14.12.2006 வரையிலும் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது. நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பள்ளிபாளையம், அரசு மேல்நிலைப்பள்ளி குமாரபாளையம், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பவானி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சித்தோடு அரசு மேல்நிலைப்பள்ளி, கவுந்தப்பாடி அரசு மேல்நிலைப்பள்ளி, தளவாய்பேட்டை மற்றும் மையிலம்பாடி ஆகிய பள்ளிகளுக்குப் பயிற்சி ஆசிரியர்கள் அனுப்பப்பட்டு கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. கற்பித்தல் பயிற்சியின் மூலம் பயிற்சி ஆசிரியர்களைப் பட்டை தீட்டிய வைரங்களாய் அறிவு ஒளிபெற உதவிய மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கும், பள்ளித் தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் வழிகாட்டிகளாய் செயல்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறோம்.

## ஆசிரியர்-அலுவலர் பணியேற்பு-மாற்றம்

கல்லூரி முதல்வர் பொறுப்பிற்கு பேரா.கல்யாணதுரை அவர்கள் 03.07.2006 அன்று பதவி ஏற்றார். தமிழக அரசு முதல்வர் பேரா.கல்யாணதுரை அவர்களை இடைக்கால பணிநீக்கம் செய்து, 13.01.2007 அன்று முதல் பொறுப்பு முதல்வராக பொருளறிவியல் துறை பேராசிரியர் திரு.மா.ஜெகநாதன் பணிநியமனம் செய்துள்ளது.

காலியாக இருந்த கண்காணிப்பாளர் பணியிடம் நிரப்பப்பெற்று திருமதி.சு.சசிகலா தங்கச்சி 24.07.2006 முதல் பணியாற்றி வருகிறார். இக்கல்லூரியின் உதவியாளர் பணியிடத்திற்கு 18.06.2006 அன்று முதல் திருமதி.ப.பிரேமாராணி பணியாற்றி வருகிறார்.



Scanned with CamScanner

## களப்பயணம்

முதல்வர் (பொறுப்பு) திரு.மா.ஜெகநாதன் அவர்களின் ஏற்பாட்டின்படி, சுற்றுச்சூழல்கல்வி களப்பயணமாக உதகமண்டலம் 12.04.2007 செல்ல திட்டமிடப்பட்டு இப்பயணம் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்களப்பணியை மிகச்சிறப்பாக நடத்திட முழுமுயற்சி எடுத்து முன்னின்று நடத்திய திரு.ச.மணிவண்ணன், கல்லூரி நூலகர் அவர்களையும், மற்றும் உறுதுணையாக இருந்த பேரா.ந.சுப்ரமணியன் அவர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்.

## நூலகம்

2006-2007 ஆம் கல்வியாண்டில் நூலகத்தில் 47 புத்தகங்கள் ரூ.6000 - தொகைக்கு அரசு நிதி ஒதுக்கீட்டில் வாங்கப்பட்டது. கீழ்காணும் நாளிதழ்கள், கல்வியியல் குறித்த மாத இதழ்கள், பருவ வெளியீடுகள் ரூ.2700-தொகைக்கு வாங்கப்பட்டன.

1. NCERT Publications - School Science, Value Education, Journal of Indian Education, Science Education.
2. காலச்சுவடுகள், புத்தகம் பேசுகிறது, தமிழரசு, விஞ்ஞானச்சுடர், கலைக்கதிர் - 12
3. தினமணி, The Hindu, Indian Express, Employment News.

நூலகம் முற்றிலும் திறந்த முறை (Open Access System) பயன்பாட்டில் மாணவ, மாணவியர்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. இக்கல்வியாண்டில் மாணவர்களால் சுமார் 4000 புத்தகங்கள் உபயோகப்படுத்தப்பட்டன. பார்வைப் புத்தகங்கள் (Reference Books) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எளிதில் பயன்படுத்தும் வகையில் இருந்தது.

## பிற விழாக்கள்

கல்லூரி வளாகத்தில் 15-08-2006 அன்று சுதந்திர தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 19.10.2006 அன்று கல்லூரிப் பேரவைத்தொடக்கவிழா கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமையில் குமாரபாளையம் எஸ்.எஸ்.எம்.கல்விநிறுவனங்கள் தாளாளர் கவாலியர் எம்.எஸ்.மதிவாணன் குத்துவிளக்கேற்றி, சிறப்புரையாற்ற மிகச் சிறப்பாய் நடைபெற்றது. 26.01.2007 அன்று குடியரசு தினவிழா பொறுப்பு முதல்வர் அவர்களாலேயே கொண்டாடப்பட்டது.

Scanned with CamScanner

## பாடி வாழ்க்கை

பி.எட். மாணவர்களுக்கு சமூகப்பணி பாடிவாழ்க்கை கல்லூரி வளாகத்தில் 26-12-2006 முதல் 30-12-2006 வரை ஐந்து நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பாடி வாழ்க்கை தொடக்கவிழா 26.12.2006 முற்பகல் 10 மணியளவில் திரு.எஸ்.டி.சந்திரசேகர், தாளாளர், வேளாளர் கல்வி நிறுவனங்கள், ஈரோடு அவர்களால் இனிதே துவக்கி வைக்கப்பட்டது. கீழ்க்காணும் தலைப்புகளில் சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்குத் தேவையான சீரிய கருத்துக்களை வழங்கினர்.

1. மனித உரிமைகள் : திரு.ச.பாலமுருகன், வழக்கறிஞர்.
2. சொத்துரிமை : திரு.ஆர்.வீரமணி, வழக்கறிஞர்.
3. ஆரோக்கிய வாழ்வுக்குச் சித்த மருத்துவம் : டாக்டர்.எஸ்.கண்ணுசாமி, அரசு மருத்துவர்.
4. சாரண சாரணிய விளக்கம் மற்றும் பயிற்சி வகுப்புகள் : திரு.ஆ.பார்த்திபன் மற்றும் திருமதி.சத்தியபாமா சாரண ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எம்.மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம்.

ஆகிய சிறப்பு விருந்தினர்கள் வழங்கிய சிறந்த கருத்துகள் எம் மாணவச் செல்வங்களுக்குப் பெரிதும் பயனுள்ள வகையில் அமைந்தது. முதல்வர் பொறுப்பு திரு.மா.ஜெகநாதன் அவர்கள் பாடி அலுவலராகப் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினார். மாணவ, மாணவியர்கள் இந்த 5 நாட்களில் தங்களின் ஆர்வம் மிக்க உழைப்பு மற்றும் ஒத்துழைப்பினை நல்கினர். கலை நிகழ்ச்சிகள் மூலம் தங்களின் பல்வேறு மாறுபட்ட தனித்தன்மைகளையும் வெளிப்படுத்துபவர்களாகவும் விளங்கினர். கல்லூரி வளாகம் இவர்களின் களப்பணி மூலம் மேலும் தூய்மையடைந்தது குறிப்பிடத்தக்கது. தலைமைப்பண்பு, விட்டுகொடுக்கும் பண்பு, கூடிவாழ்தல், ஒற்றுமை உணர்வு ஆகியவற்றை மாணவ, மாணவியர்கள் மனதில் விதைக்கும் வண்ணம் இப்பாடி வாழ்க்கை சிறப்புப் பெற்றது. சிறப்புப் பேச்சாளர்களின் சிறப்புரைகள் மாணவ, மாணவிகளுக்கு வழிகாட்டும் அளவிலும், அறிவைப் பெருக்கும் வகையிலும் அமைந்தன. இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழக பி.எட்., மையமாக இக்கல்லூரி விடுமுறைக் காலங்களில் மிகச்சிறப்பாக இயங்கிக் கல்விப் பணியைச் செய்து வருகிறது.

Scanned with CamScanner

## விளையாட்டு விழா

இக்கல்லூரியில் உடற்கல்வித் துறைக்கு ஆசிரியர் இல்லாத குறையினைப் போக்கி விளையாட்டுத்துறைக்கு பொறுப்பேற்று விளையாட்டுப் போட்டிகளை நடத்த உதவிய பேராசிரியர்.திரு.ந.சுப்பிரமணியம் கல்வியியல்துறைத் தலைவர் அவர்களுக்கும், விளையாட்டுப்போட்டுகளில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவச் செல்வங்களுக்கும் இக்கல்லூரியின் சார்பில் உளமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்குகிறோம். விளையாட்டுப்போட்டிகளை சிறப்பாக நடத்திக் கொடுத்த அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு ஆசிரியர் பெருமக்களுக்கும், அனுமதி அளித்த தலைமை ஆசிரியர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இக்கல்லூரியின் இலக்கிய மன்ற ஆண்டு நிறைவு விழாப் போட்டிகள் நடைபெற்றன. மாணவ மாணவிகள் இப்போட்டிகளில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு பரிசுகளை வென்றனர். போட்டிக்குப் பொறுப்பாளராக இருந்து செயல்பட்ட முனைவர்.வெ.கலைச்செல்வி அவர்களுக்கும், நடுவர்களாக இருந்து போட்டிகளை நடத்த உதவிய பேராசிரியர் திரு.மு.கந்தசாமி, மற்றும் திரு.ச.மணிவண்ணன் அவர்களுக்கும், பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.

## மாணவர் உதவித்தொகை

இக்கல்லூரியில் இவ்வாண்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித்தொகை 36 பேருக்கு ரூ.55,416 வழங்கப்பட உள்ளது. மேலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி உதவித்தொகை 27 பேருக்கு 1,57,275 வழங்கப்பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான உதவித்தொகை 28 பேருக்கு 48,068 வழங்கப்பட்டது. சிறப்பு கடன் உதவித் தொகை 1,69,000 ஐ 26 பேருக்கு அளிக்கப்பட்டது.

## விடுதி

இக்கல்லூரியில் மாணவ, மாணவியருக்கான தனி விடுதிகள் உள்ளன. அனைத்து மாணவ, மாணவிகளும் விடுதிகளிலேயே தங்கிப் படித்து வருவது கல்லூரியின் மற்றொரு அம்சமாகும். ஆண், பெண் இரு விடுதிகளுக்கும் பேராசிரியர் ந.சுப்ரமணியன் அவர்கள் விடுதித் துணைக்காப்பாளராகச் செயலாற்றி வருகிறார். பகிர்ந்தளிக்கும் முறையில் குறைந்த செலவில் நிறைவான சேவை செய்யப்படுகிறது. இங்கு பணிபுரியும் தலைமை சமையல்காரர். திரு.இராமநாதன் மற்றும் விடுதியின் ஏனைய உதவியாளர்களுக்கும் கல்லூரியின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Scanned with CamScanner

**பயிற்சிகள்**

பேராசிரியர்.மு.கந்தசாமி அவர்கள் 20.11.2006 முதல் 01.12.2006 வரை NCERT மைசூர் நடத்திய PAC Trainning Programme, மற்றும், 19.02.2007 முதல் 23.02.2007 வரை NCERT டெல்லி நடத்திய Pedagogy of Peace Education புத்தாக்க பயிற்யிலும் பங்கேற்றார்.

07.02.2207 மற்றும் 08.02.2007 ஆகிய இரண்டு நாட்களில் DTERT, சென்னை நடத்திய EDUSAT பயிற்சி வகுப்பில் பேரா.மு.கந்தசாமி, பேரா.முனைவர்.வெ.கலைச்செல்வி, பேரா.ந.சுப்ரமணியன், பேரா.முனைவர்.அ.தேவகி ஆகியோர் பங்கு பெற்றுப் பயனடைந்தனர்.

பெரியார் பல்கலைக்கழகம் நடத்திய ஒரு நாள் இளைஞர் செஞ்சிலுவைச்சங்கம் பற்றிய கருத்தரங்கில் அதன் ஒருங்கிணைப்பாளர், நூலகர் ச.மணிவண்ணன் அவர்கள் 06.02.2007 அன்று பங்குபெற்றார்.

ஆசிரியர் பணி அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி என்ற பொன்மொழிக்கு ஏற்ப கல்விப்பணியில் தம்மை முழு மனதாய் அர்ப்பணித்து நாட்டின் வருங்காலச் சிற்பிகளாய் ஆசிரியர்களை உருவாக்கும் பணியைச் செய்துவரும் எமது பேராசிரியப்பெருமக்களுக்கும், கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாய் நிற்கும் அனைத்து அலுவலக அன்பர்களுக்கும், மாணவக் கண்மணிகளுக்கும் அவர் தம் பெற்றோர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளை உரித்தாக்கி ஆண்டறிக்கையை நிறைவு செய்கிறேன்.

Scanned with CamScanner

# முரண்பாடு

ஒளியில் மலரும் நாள்
இருளில் முடிகிறது
பயிர்களுக்கு தாய்ப்பாலாகும்
மழையே
வெள்ளமாகி
பயிர்களை அழிக்கிறது,
மலைகளில்
தோன்றும் நதி
பள்ளங்களை நிரப்புகிறது,
ஜனனத்தில்
உதயமாகும் வாழ்வு
மரணத்தில்
அஸ்தமனமாகிறது,
பெண்ணும்
ஒரு முரண் தொடை செய்யுள்தான்
அவள்
ஒரு கண்ணில் அமிர்தமும்
ஒரு கண்ணில் நஞ்சும்
வைத்திருக்கிறாள்
யாரால்
என் உயிர் போகிறதோ,
அவளால் தான்
உயிர் வாழ்கிறேன்



எஸ். கதிர்வேல், எம்.ஏ., பி.எட்.,
வரலாற்றுத்துறை.
அரசு கல்வியியல் கல்லூரி.
குமாரபாளையம்.

Scanned with CamScanner

# சிறுகதை

## ஏழ்மை

"வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகள் நம் மனதை ரீங்காரம் அடித்துக் கொண்டு தான் இருக்கின்றன. அந்த நிகழ்ச்சிகளால் நம் மனது இன்பமும் அடைந்திருக்கும்; துன்பமும் அடைந்திருக்கும்; குறிப்பாக சிறு வயது நிகழ்ச்சிகள்."

"என் பயணம் நன்றாகவே அமையும் என்று நினைத்து இருக்கையில் அமர்ந்தேன். வானம் சற்று மேக மூட்டத்துடன் காணப்பட்டதால் விமானம் அந்த இடத்திலேயே வட்டம் அடித்துக் கொண்டு இருந்தது."

"விமானம் சிறிது நேரத்தில் பறக்க ஆரம்பித்தது. என் மனமே பறப்பது போல ஒரு உணர்வு."

"சார்! வாட் யூ வான்ட்"

"நோ! தாங்ஸ்!"

அந்தப் பெண் அடுத்த இருக்கைக்கு நகர்ந்தாள்.

"நான் அடையப் போகும் இடத்தை நினைத்து நினைத்து என் மனம் குதூகலம்அடைந்தது. வேலை பார்ப்பது சிங்கப்பூராக இருந்தாலும், தாய் நாட்டை மறக்கவில்லை."

"பச்சைப் பட்டாடை உடுத்திய வயல்வெளி! பாடல் பாடும் குயில்கள்; கிளிகள்; கருமையான மலைகள்; இவை அனைத்துமே கண் முன் ஓடின."

"இந்த இருப்பத்தைந்து ஆண்டுகளில் இந்த நாளுக்காகத் தான் காத்துக் கொண்டு இருந்தேன்."

"பயணிகள் கவனிக்கவும்! விமானம் சென்னையை அடைந்து விட்டது."

உடைமைகளை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தேன். அருகில் தொலைபேசி அழைப்பினைக் கேட்டு திரும்பினேன்.

"கஸ்டமர் வெயிட்டிங்யா! அப்புறம் பேசு! என்ற படியே என் அருகில் வந்தான்."

"ஆஹா! என் நாடு பொருளாதாரத்தில் வளர்ந்துள்ளதே!" என்று வியந்தேன்.

சந்தோஷம் மனதிற்குள் வெள்ளம் போல ஓட ஆரம்பித்தது.

"ஐயா! சாமி! தருமம் பண்ணுங்கய்யா! மகா பிரபு தருமம் பண்ணுங்கய்யா."

என்ற குரலைக் கேட்டதும் சந்தோஷம் குறைய ஆரம்பித்தது. மனதை அடக்கிக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தேன்.

ஆர். நாகேந்திரன்,
தமிழ்த்துறை.
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.

Scanned with CamScanner

# கவிதை



* மழையில் நனைந்த
எனது ஆடைகள்
நாற்காலியில்
உலறுகின்றன
கையும் காலும் ஆட்டியபடி.



* நிலவு
என் ஜன்னல் வழி
அறையின் இருட்டைத்
துடைக்கிறது
என்னைக் கேட்காமல்
ஜன்னலை மூடிவிடலாம் தான்
துடைத்த இருட்டை
எறிந்து விட்டல்லவா
போய்விடும்.

* நீர் தேடிவந்த
காக்கை
நாவறலத்
திரும்புகிறது.
கூலாங்கல் பொறுக்கப்போன
காக்கைக்கான
என் காத்திருப்பு
அது திரும்பததால்
கரைகிறது.



* இருட்டைத் துடைக்க
மெழுகுவர்த்தி இல்லாத
தனிமையில்
எரியும் உன் நினைவோடு
வந்து தொலைகிறது
செத்த காலம்.



மு.கோபால்,
தமிழ்த்துறை

Scanned with CamScanner

# லதாவின் நினைவுகள்

திருச்சி இரயில் நிலையத்தில் கும்பகோணம் செல்வதற்காக லதா நின்று கொண்டிருந்தாள். அதே நிலையில் லதாவின் வயதை ஒத்த ஒரு பெண் தன்னுடைய தாயுடன் நின்றுக் கொண்டிருந்தாள். அந்தப் பெண் தன் தாயிடம் கூறினாள்.

"அம்மா எனக்கு கால் வலிக்கின்றது."

தாய் கூறியது "அடி என் கண்ணே வா உட்காரு என்று கூறி தன் மடிமீது படுக்க வைத்தாள். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த லதா தன் சருகான வாழ்க்கையைப் பற்றி எண்ணத் தொடங்கினாள்.

தனது கிராமத்து பள்ளியில் லதா அப்பொழுது 3-ம் வகுப்பு படித்துக் கொண்டு இருந்தாள். அவளது குடும்பம் தாத்தா, பாட்டி, சித்தப்பா, அத்தை, இரண்டு தங்கைகள் ஒரு அக்காவும், தம்பியையும் கொண்ட கூட்டுக் குடும்பம்.

உணவிற்க்காக அடிக்கடி குடும்பத்தில் சண்டை ஏற்படும். அதனால் அனைவரும் ஒன்றாக அமர்ந்து தங்களுடைய வீட்டின் முற்றத்தில் திறந்தவெளியில் அமர்ந்து கொள்வார்கள். லதாவின் தாய் அனைத்து உணவையும் ஒன்றாக போட்டு அதை பிசைந்து அனைவருக்கும் ஒரு ஒரு கை என்றுக் கொடுப்பார். இந்த அழகானக் கூட்டுக்குடும்பத்தைக் கண்டு விண்ணில் உள்ள நட்சத்திரங்களும் பொறாமைக் கொண்டு கண்சிமிட்டும் அந்த அழகிய இரவில் லதாவின் தாய் அப்படியே சாய்ந்தாள். லதாவும் மற்றக் குடும்பத்தினரும் அதிர்ச்சியுற்றனர்.

அம்மா இறந்ததும், அம்மாவைப் பற்றிய எண்ணமே இல்லாத அப்பா புதிய மாப்பிள்ளையானார். புதிய அம்மா வந்தவுடன் குடும்பமும் சிதறியது. உறவுகள் எல்லாம் சிறகு முளைத்தப் பறவை போலப் பறந்தன. ஆனால் லதாவின் மாமா மட்டும் லதாவின் அக்காவைப் படிக்க வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் லதாவுக்கும் அவள் சகோதர சகோதரிகளுக்கும் புதிய அம்மாவின் கொடுமை ஆரம்பமானது. காலங்கள் கடந்தன. லதா அந்த வருடம் +2 தேர்வில் முதலிடம் பிடித்தாள்.

ஆனால், மேற்கல்வி தொடர இயலாமல் வருந்தினாள். ஓராண்டு முடிந்தது. பின்பு தனது ஆசிரியரின் உதவியுடன் கல்லூரிப் படிப்பைத் தொடங்கினாள். ஆனால் தனது வறுமையை நினைத்து வருந்தியதனால் கல்லூரியில் மூன்றாம் இடத்தையே அவளால் பிடிக்க முடிந்தது. மேலும், அவளுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரித்துக் கொண்டே சென்றது. ஆனால், அவளது தந்தை அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆயினும், தனது தம்பி, தங்கைகளைக் காப்பாற்றும் பொறுப்பு அவளுக்கு இருந்தது. ஆகையால், தனது நண்பர்களின் உதவியுடன் ஒரு அரசு கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறாள்.

திடீரென்று ஒரு சப்தம். லதா தனது நினைவுகளில் இருந்து மீண்டபோது இரயில் வரும் ஓசை கேட்டது. லதா தனது பயணத்தைத் தொடர்ந்தாள். தெய்வம் அவளுக்குத் துணை இருக்கட்டும்!

"ஜெய்ஹிந்த்"




ஆர்.ராஜலெட்சுமி,

இயற்பியல்துறை,

அரசு கல்வியியல் கல்லூரி,

குமாரபாளையம்.

# சுதந்திரம்?

சுதந்திரம்
இருட்டில் கிடைத்த காரணமோ!
நம் நாடு இன்னும் விடியவில்லை
இருட்டிலே பல தீமைகளும் தீவிரவாதங்களும்
நெஞ்சு பொறுக்கவில்லையே!
சுதந்திரம், பெயர் மட்டும் மிஞ்சுகிறது
தீமைகளுக்கு மட்டும் சொந்தமானது
கண்களே கலங்காதீர்
நெஞ்சமே குமுறாதீர்
என் இளைஞர்களே!
பொங்கி எழுங்கள் பொறுத்தது போதும்
உன்னுள் இருக்கும் உறுப்புகளே.... அதன்
பொறுப்பைச் சரியாகச் செய்யும் போது
அதனுருவம் கொண்ட மனிதா
இன்னும் நீ ஏன் உறங்கிக் கொண்டிருக்கிறாய்?
சூரியனாய் மாறுங்கள்
இருட்டை வெளிச்சமாக்குவதற்கு...
தீமைகளையும், தீவிரவாதங்களையும்
சாம்பலாக்குவதற்கு!
விடியட்டும் இந்த இரவு
மெய்படட்டும் என் கனவு
இளைஞர்களே, உதயமாகி விடுங்கள்
சுதந்திரத்துக்கு சுதந்திரம் கொடுக்க....



ஜெய்ஹிந்த்!

வி.விசுக்குமார், பி.ஏ., பி.எட்.,
ஆங்கிலத்துறை,
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.

Scanned with CamScanner

# மதிப்பெண்

மதிப்பெண்கள் வாங்கினோம் என்பதைவிட மதிப்பெண் பெறும்பொழுது எவ்வளவு மதிப்பெண்கள் வாங்கவில்லை என்று பார்க்க வேண்டும்.

100-க்கு 80 எடுத்தால் போதும், 90 எடுத்தால் போதும் என்று எண்ண வேண்டாம். அவர்களே 100 மதிப்பெண்கள் என்று நிர்ணயித்திருக்கும் பொழுது, நாம் ஏன் அதில் தள்ளுபடி செய்ய வேண்டும்? முழு மதிப்பெண்களையும் பெற வேண்டும் என்று நினைக்க வேண்டும்.

என்ன, அனைவரும் 100-க்கு 100 வாங்கத் தயாரா?

ஒரு மாணவன் சிறப்பாகப் படித்தால், அதில் ஆசிரியரின் பங்கைவிட அவனுடைய பங்கே அதிகம். அதைப்போலவே, ஒரு மாணவன் சிறப்பாக படிக்கவில்லையென்றால், அதில் அவனுடைய பங்கைவிட ஆசிரியரின் பங்கே அதிகம்.

## மனிதன்

நண்பனாய் இருக்கும்போது
நிறைகளையும்
பகைவனாய் மாறும்போது
குறைகளையும்
பார்க்கிறான்.




ந.மனோசித்ரா,
கணிதத்துறை,
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.


## நட்பின் பிரிவு

கல்லூரி என்னும் பூங்காவனத்தில் வந்து
தோழி என்னும் பூவைத் தேடினேன்
பூவை கண்டதும் நட்பு மலர்ந்தது
மலர்ந்த பாசம் உதிர்ந்து விடுமோ
என்று அஞ்சினேன்.
பிறகுதான் தெரிந்தது அந்தப் பூ
உதிரா நட்பு என்று
கனவு என்பது காலை வரை
நட்பு என்பது சாகும் வரை.....




எஸ்.இராஜேந்திரன்,
தாவரவியில் (உயிரியியல்)

# கவிதை

★ நீர்த் துளிகள் சொட்ட
சூரியனின் துணை கொண்டு
வணக்கம் சொன்னான் என் நண்பன்
அருகம் புல்.

★ என் நாட்டு எல்லையில்
அழகான வேலிகள் அது!
அந்நியனுக்கு ஆயிரம்
உயிர்களின் பலி!!

★ விழிகள் கூட
காற்றைக் கொடுக்கின்றன
என்னவள் ஏனோ அதனை
கொடுக்க மறுக்கிறாள்
காதல் கானல் நீர்
இரண்டும் சகோதரிகள்
தேடத் தேடத் கிடைக்காது!!!

★ எறும்பு கூட காலம் அறியும்
நாற்று கூட நாட்கள் அறியும்
காகம் கூட கானத்தை அறியும்
வண்டு கூட மலரை அறியும்
மலரும் தென்றல் அறியும்!
இளைஞன் ஏனோ உழைப்பை அறியான்!!

★ சாலை ஓரங்களில்
மெர்குரி விளக்குகளால் ஒளி!
ஏழைகளின் வீடுகளில்
தற்குறி வாழ்க்கையாய் இருள்!!

★ பிறருக்குக் கடன் கொடு!
உன் மேன்மை உயர ஆனால்
திரும்பக் கேட்காதே கல்வியை !!

★ மெரீனாவின் மேன்மைகள்
கடற்கரையில் இரண்டு
மகான்களின் ஈமச்சடங்குகள்!!!

★ கூடியிருந்தால் கோடி நன்மை
என் இனிய கூடுதுறை
மக்கள் மனதில்!



கே. அரிதாஸ்,
வரலாற்றுத்துறை

# TRUTH



**Think truely and your thoughts**
**Will become famine's feed.**
**Speak truely and your words**
**Will become useful seed.**
**Live truely and your life**
**will become eternal deed.**

# ETIQUITTE AND MANNERS

Etiquitte means conventional social behaviour one should try to develop good manners in one's life.

" It's not that how long you live but how you live".

life is not the bed of roses. It contains some thorns also. So we shouldn't calculate the miles that we passed but the miles that we have to.

Manners are the brick stones for the sucess in our lives. One who controls his mind, can control his own desting we should try to find the treasure that is inhibited in us, by following good manners.



எ.சிவகாமி, பி.எட்.,
ஆங்கிலத்துறை

Scanned with CamScanner

# வெகு சீக்கிரத்தில் விடியற்காலை

அதிகாலைப் பொழுது, ஆதவனின் இனிய வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பறவைகளின் ஆராவாரம், எங்கோ சப்தம் கேட்பதுபோல் உணர்ந்தவளாய் திடுக்கிட்டு எழுந்தாள் திலகம். அவளின் பார்வைகள் கடிகார முள்ளினை நோக்கி அடடா சற்றுத் தாமதமாய் எழுந்துவிட்டோமே!, என்று உணர்ந்தவளாய் வாசலுக்குச் சென்று தண்ணீர் தெளித்து, கோலமிட்டு, பின் சமையலறைக்குள் நுழைந்தவள் சமையலில் மூழ்கினாள்.

" அம்மா", பால் வாசலில் பால்காரன் குரல். இதோ வந்துவிட்டேன் என்று பதிலளித்தவளாய் பால் வாங்கச் சென்றாள் திலகம். உள்ளே வந்தவள் கணவனிடம் என்னங்க குழந்தைகளை கொஞ்சம் எழுப்பிக் குளிக்க வையுங்க என்றவளுக்கு, கணவன் சேகரின் பதில் இன்று ஒப்படைக்க வேண்டிய அலுவலகக் கோப்புகள் அதிகம் உள்ளது. நான் அதை பார்க்கிறேன். இன்று நீயே குளிக்க வைத்துவிடு என்றான். பதில் ஏதும் இல்லாதவளாய் அருகில் படுத்திருந்த குழந்தைகளை ரவி, ராஜீ எழுந்திருங்கள் என்ற அவளின் குரலுக்கு குழந்தைகள் சிணுங்க அதை ரசிக்க நேரமின்றி முத்தமிட்டு எழுப்பினாள். அவர்களைக் குளிக்க வைத்தாள்.

இதற்கிடையில் சமையலை ஒருவழியாய் முடித்தவள் பிள்ளைகளுக்கு உணவு கொடுத்து மதிய உணவை போட்டுக் கொண்டிருக்க, வாசலில் பஸ் சத்தம். இதோ வந்து விட்டார்கள் என்று குரல் கொடுத்தவளாய் பிள்ளைகளை பஸ் ஏற்றி விட்டு கனிவான கையசைப்பினை அளித்தவள், உள்ளே திரும்பினாள்.

அலுவலகம் செல்ல எதிர்பட்டு வந்த கணவனையும் கையசைத்து அனுப்பி வைத்தவள், ஏதோ எண்ணியவளாய் வாசலில் நின்று கொண்டிருந்தவள் அய்யோ இன்னும் தான் அலுவலகம் செல்ல குறுகிய நேரமே இருக்கிறது என்பதனை உணர்ந்தவளாய் குளிப்பதற்கு சென்றாள். பின் அரைக்குறை உணவு உண்டு மதிய உணவு எடுத்துக்கொண்டு அலுவலகம் புறப்பட்டாள். பேருந்தின் நெரிசல்களுக்கு இடையே ஒருவழியாய் வந்து சேர்ந்தாள் அலுவலகத்திற்கு.

ஏதேதோ எண்ணங்கள் மன ஓட்டத்தில் இருந்தாலும், எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு, அன்றைய வேலையினை தொடங்கினாள். மதிய உணவு வேளையில் சக ஊழியர்களோடு சற்றே பேச்சு வார்த்தை, பின்னர் மீண்டும் வேலை.

மாலையில் வேலை, முடிந்ததும் மீண்டும் பேருந்து நெரிசல்களுக்கிடையே வீடு வந்து சேர்ந்தாள். அவள் வீட்டிற்குள் நுழைந்ததும் அம்மா, என்று அழைத்துக் கொண்டு ஓடி வந்த குழந்தைகளுக்கு ஆசையாய் முத்தமிட்டு அவர்களுக்கு சிற்றுண்டி செய்து கனிவோடு உபசரித்தாள். பின்பு இரவு வேளை உணவுகளை தயார் செய்தாள். இரவு அனைவரும் உணவு உண்டார்கள். பிள்ளைகளும் கணவரும் உறங்கச் சென்றனர்.

மீதியிருந்த வேலைகளை முடித்தவள் படுக்கையறைக்குச் சென்றாள். மனம் எங்கோ நிற்காமல் உறங்க மறுத்தது. அவள் மனதில் எண்ணங்கள் ஓயாத கடல் அலையாய் என் அன்பு கணவனோடு பேச நேரமில்லையே என் ஆசைக்குழந்தைகளோடு கொஞ்சி மகிழ நேரமில்லையே என்ன ஒரு இயந்திர வாழ்க்கை என்று எண்ணியவாறு உறங்க மனம் மறுத்தது. மறுநாள் பொழுதை மனதில் வைத்து கண்களை மூடி உறக்கத்தை வரவழைத்துக் கொண்டாள். மறுநாள் காலை எழுவதற்காக ஏனோ இவளுக்கு மட்டும் வெகு சீக்கிரத்தில் விடியற்காலை...

ரா.சிவசக்தி,

இயற்பியல்

Scanned with CamScanner

# கனவு மெய்ப்பட வேண்டும்



பள்ளியில் நடந்த விளையாட்டு போட்டிகள் அனைத்திலும் ஆனந்திதான் முதலிடம் வகித்தாள். ஓட்டப்பந்தயத்தில் அவளது திறமையைக் கண்டு அனைவரும் வியந்தனர். அவளது பெற்றோர்களும், உறவினர்களும் ஆனந்தியை மிகவும் மகிழ்ச்சியோடு கொண்டாடினர்.

திடீரென்று ஒரு சத்தம் ஏய் அநாதைக் கழுதையே, நொண்டி மாடே எந்திரிடி, இன்னும் என்ன தூக்கம் – என்று

அநாதை ஆசிரமத்தில் கால் ஊனமுற்ற ஆனந்தியின் கண்களில் இருந்து வழிந்தன இருசொட்டுக் கண்ணீர். தான் கண்ட கனவினை எண்ணி வருந்தினாள்.


கு.சுதா,

தமிழ்த்துறை


# வெற்றிக்கு அடிப்படை



மற்றவர்கள் உன்னைத்
தூக்கி எரியும் போது !
கல்லாய் இருக்காதே !
காகிதமாய் இரு !
அப்போது தான்,
காற்றடித்தால் மேலே உயர
முடியும் !


சு.கிருஷ்ணவேணி,

தமிழ்த்துறை,

அரசு கல்வியியல் கல்லூரி,

குமாரபாளையம்.


Scanned with CamScanner

## சூரியப்பார்வை



தாய்மையின் பிறப்பிடமே!
ஆணுக்கு கீழ்தான்
பெண்கள் எனக்
கூறி வரும்
பெண்ணின் பெருமையை உணராத அற்பர்களை
உன் சுடர் விழி
பார்வையால்
சுட்டெரிக்க
சூரியனைப் போல்
எழு!

## தன்னம்பிக்கை

தன்னம்பிக்கையுடன்
வாழும்
ஒவ்வொரு மனிதனும்
பூமியிலேயே
சொர்க்கத்தை
காண்கிறான்
வாழும் போதே!



ஆ.அந்தோணிசாமி
கணிதத்துறை

## ஹைக்கூ

நட்பின் விளிம்பில்
நகைக்கிறது
காதல்

இரத்த நெடி முடியாமல்
புத்தன் கிளம்பி விட்டான்
அகதியாக.....



விடிகிறது...
திருடப்படுகிறார்கள் தினமும்
சிறுவர்கள்
நட்சத்திரங்கள்

ச.பாஸ்கரன்
தமிழ்த்துறை

Scanned with CamScanner

# கடைசிக் கோப்பைத் தேநீர்!

விடுதியில் சேர்த்துவிட்டு
விடைபெற்றுச் சென்ற தந்தை
செல்விற்குத் தந்து போன
36 ரூபாயில்
ஏழ்மையின் நெடி

பயன்படுத்தத் தோன்றாமல்
பெட்டிக்குள் கிடக்கிறது
தங்கை வாங்கித் தந்த
சந்தன சென்ட் குப்பி

அக்காள் வாங்கித் தந்த
அம்ரு தாஞ்சன் தைல டப்பா
தேய்க்காமல் பார்க்கும் போதே
நெஞ்சில் இறங்குகிறது
காரம்

அம்மா வாங்கித் தந்த
அய்ந்து ரூபாய் பாண்ட்ஸ் பவுடர்
உபயோகிக்கும் போதெல்லாம்
பாச வாசம்.

பத்தாம் வகுப்புத் தம்பி தந்த
கட்டம் போட்ட கைக்குட்டை
வியர்வை துடைக்கப் பயன்படவில்லை
கண்ணீர் துடைத்தே கரிக்கிறது
.

கொசுக்கள் நிறைந்த
விடுதியின் இரவுகள்
கொசுக்களை விடவும்
நேரத்திற்கு உண்டாரா அப்பா
சர்க்கரை மாத்திரை கொண்டாளா அம்மா
வம்பில் இறங்காமல் படிப்பானா தம்பி

நினைவுக் கொசுக்கள் நெஞ்சில் கடித்துக்
குடித்த ரத்தத் துளிகள் கோடி

பத்து மாதம் தான் பறந்து போகும்
வாத்தியாரான வருத்தம் ஏது?
அறையில் நண்பன்
அழகாய்ச் சொன்னான்
இதுவரை நேரவில்லை – வீட்டை
விட்டுப் பிரியும் எந்தத் துயரும்

பத்தே மாதம் தான் என்றாலும் கூட
கவலை மறந்து கண்கள் சிரிக்கும்
கலைகள் எதுவும் கைவரவில்லை
பச்சைக் குழவி எனக்கோ இன்னும்
பக்குவப் பட்டும் பழக்கமுமில்லை.

எனக்கென்னவோ
உயிர் நண்பனுடன்
ஊரில்
வழக்கமான தேநீர்க் கடையில்
குடித்த
கடைசிக் கோப்பைத் தேநீர்
தித்தித்ததாய் நினைவில்லை
கரித்தது.



க.பீர்முகமது
தமிழ்த்துறை

Scanned with CamScanner

# தொடர் தேடல்....

ஒன்றின் முடிவு இன்னொன்றின் தொடக்கம். அதனால் நேற்றைக் கத்தரித்துக்கொண்டு இன்று பிறப்பதில்லை. நேற்றின் வேரும் விழுதுகளும் வலியும் வடுக்களும் இன்றும் வாழும் நாளையும் தொடரும். இருட்டில் நீ தடுமாறி விழாதிருக்க நேற்றின் அனுபவங்கள்தான் உன்னை வழி நடத்துகின்றன. ஆம். பயப்படாதே. பூமி உடைந்து போய் விடவில்லை. 'சூரியன் அணைந்து போய் விடவில்லை. வானம் இடிந்து போய் விடவில்லை சுழற்சி நின்றுவிடவில்லை.

நாளுக்கு நாள் நெருக்கடிக்குள்ளாகும் வாழ்க்கை... சோதனைக்குள்ளாகும் தேசம்... எங்கும் பொய்மையும் வஞ்சகமும் கொடி நாட்டுகின்றன. உண்மையும் உழைப்பும் உதாசீனப்படுத்தப்படுகின்றன. இந்த முற்றுகை வளையத்துக்குள் புன்னகை பூக்க முடியுமா? என்கிறாயா நீ. முடியும். வருத்தப்படாதே. வருத்தப்படுவது வேறு, சிந்திப்பது வேறு, நாம் நினைத்தபடியே எல்லாம் நடக்கும் என்று யார் சொன்னது? நாம் விரும்பியபடி நடக்கவில்லையென்றால் நாம் எங்கோ கோட்டை விட்டிருக்கிறோம் என்று தானே பொருள் அதை ஏன் யோசிக்க மறுக்கிறாய்?

உனக்குள்ளே நீ அகத்தாய்வு செய்தல் வேண்டும் அகத்தாய்வு செய்வது அவ்வளவு சுலபமல்ல. துணிவு வேண்டும். விசால இதயம் வேண்டும். முடிவற்ற தேடல் வேண்டும். பிரச்சனைகள் நேற்றும் இன்றும் ஒன்றல்ல. குழப்பம் ஏற்படுகிறதா? புரிந்துகொள். குழப்பம் தெளிவுக்கு இட்டுச்செல்லட்டும். கொள்ளை நோய்கள் மக்களை வாரிக்கொண்டு போனது நேற்றைய பிரச்சனை மருத்துவம் மக்களை கொள்ளையடிப்பது இன்றைய பிரச்சனை கல்வி மறுக்கப்பட்டது நேற்றைய பிரச்சனை கல்வி ஏலம் விடப்படுவது இன்றைய பிரச்சனை கிணற்றுத்தவளையாய் வாழ்ந்தது நேற்றைய பிரச்சனை உலகம் கிராமமாய் மாறுவது இன்றைய பிரச்சனை.

இது ஒரு சுழல்வட்டப்பாதை அதே இடத்திற்கு வந்தது போல் இருக்கும். குழப்புகிறேன் என்று நினைக்கிறீர்களா? குழப்பம் வேண்டாம். சுரண்டலின் வடிவம் மாறி இருக்கிறது. சுரண்டல் மாறவில்லை. ஒடுக்குமுறையின் வடிவம் மாறி இருக்கிறது. ஓடுக்குமுறை மாறவில்லை. பிரித்தாளும் தந்திரம் மாறி இருக்கிறது. பிரித்தாளுவது மாறவில்லை. ஆம், அறிவியல் அற்புதங்கள் ஒருபுறம், அல்லாடும் வாழ்க்கையோ மறுபுறம். உலகமே ஒரு கிராமம் என்ற வர்த்தக மந்திரம் ஒருபுறம், மதங்களால் மக்களை கூறுபோடும் தந்திரம் மறுபுறம், வெளிப்பார்வைக்கு இவை (ஏகாதிபத்தியம், பயங்கரவாதம், மதம் சாதி, இனம்............) எதிரெதிராய் தெரியும். ஆனால் இவை ஒன்றுக்கொன்று உடன்படிக்கை செய்து கொண்டவை.

பறந்து சாவது பயத்தால் சாவதினும் உன்னதமென பறவைகள் கருதுகின்றன. ஆம் நாமும் அழுது சாவதைவிட போராடிச் சாகலாம். இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை. வியர்வைத்துளிகளின் வெற்றியே இறுதியானது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றில் நூறு ஆண்டு கூட ஒரு நொடிதான்.

சிக்கி முக்கி கல் முதல் கம்ப்யூட்டர் வரை வரலாற்றை, வாழ்க்கையை மீண்டும் மீண்டும் படி...படி...படி... அடித்தளத்தில் அறிவு நெருப்பை மூட்டு. அது அணைந்துவிடாமல் விசிறிக்கொண்டே இரு... சிறு நெருப்பை ஊதி பெரும் காட்டுத்தீயாக்கு. தீமைகள் சாம்பலாகும்.

நன்மைகள் அந்த சாம்பலில் இருந்து உயிர்த்தெழும். பீனிக்ஸ் பறவைபோல... ஆம் நீ புதிதாக சிந்திக்கப் பழகு...பழக்கு....வீழ்வது எழுவதற்குதான். அறிவுத் தீப்பந்தம் ஏற்றி விடியலைத் தேடு. மாற்றம் உண்டாகும்.

தோழமையுடன்,

**க.லெனின் பாரதி**

பொருளறிவியல்

Scanned with CamScanner

## கருவறைக்குள் பெண் குழந்தை



அம்மா நான் புலம்புவது உனக்கு
கேட்கின்றதா அம்மா
அம்மா நான் புலம்புவது உனக்கு
புரிகின்றதா அம்மா – நான் தான்
உன் வயிற்றில் உள்ள ஆறுமாதக் கரு
அம்மா தயவு செய்து ஸ்கேன்
எடுத்துப் பார்த்து என்னை பெண் குழந்தை
என்று அழித்துவிடாதே அம்மா....
உன் மடிமீது உறங்க வேண்டும்
தந்தை மார்பு மீது தவழ வேண்டும்
தயவு செய்து என்னை அழித்துவிடாதே அம்மா
தாய் மனதில்...
அடி என் கண்மணியே என் பொன்மணியே
நீ இந்த பாவிகள் இருக்கும் உலகத்தை
பார்ப்பதை விட அந்த ஆவிகள் இருக்கும்
உலகத்தைப் பார்ப்பாயாக
அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால்
அப்பொழுது ஆண் குழந்தையாகப் பிறப்பாயாக
ஏனென்றால் அப்பொழுதும் இந்தப்
பெண் சிசுக் கொலை அடங்காதம்மா....

பி.காமாட்சி, பி.எட்.,
வரலாற்றுத்துறை
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.

Scanned with CamScanner

## ஹைக்கூ கவிதைகள்

ஏய் நிலவே
எந்தத் திருடனை பிடிக்க இப்படி
இரவில் உலாவருகிறாய்....



விடாமுயற்சி இல்லாதவன்
வீட்டு விலாசத்தை
வெற்றிகள் விசாரிப்பதில்லை....

சாதனை செய்துவிட்டு வீழ்
உன் சாம்பல் திருநீராய் பூசப்படும்...
உன் கல்லறையும் கோவிலாய் காட்சி அளிக்கும்...

ஒரு முட்டை உள்ளிருந்து உடைந்தால்
அது ஒரு உயிரின் ஜனனம்
அதே முட்டை வெளியில் இருந்து உடைந்தால்
அது ஒரு உயிரின் மரணம்....

நான் பூவாக பிறந்திருந்தால்...
என் தந்தை என்னை நீர்தெளித்து விற்றிருப்பார்
என்ன செய்வது முதிர்கன்னியாக பிறந்துவிட்டேன்...
இன்றும் விலைபோகாமல் இருக்கின்றேன்...

உனக்கு கூட நரையா
அருவியே....

பி.காமாட்சி, பி.எட்.,
வரலாற்றுத்துறை
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.

Scanned with CamScanner

## தொட்டில் குழந்தை



உறங்கும்போது கலைந்த கனவு நீ
விடியும்போது மறைந்த வெள்ளி நீ
விதைக்கும் போது தொலைந்த விதை நீ
தொடுக்கும் போது உதிர்ந்த மலர் நீ
எழுதும் போது மறந்த கவிதை நீ - கையில்
எடுக்கும் போது தவறி தொட்டிலில் விழுந்தாய் நீ
வானவில்லின் மறைந்து போன வண்ணம் நீ
வாழ்க்கையெனும் ஓவியத்தில் வண்ணமாக ஆவாய் நீ

## நட்பு

உலகில்

| | |
|---|---|
| அவதாரம் | - 10 |
| நவகிரகம் | - 9 |
| திசைகள் | - 8 |
| ஸ்வரங்கள் | - 7 |
| சுவைகள் | - 6 |
| பஞ்சபூதங்கள் | - 5 |
| வேதங்கள் | - 4 |
| காலங்கள் | - 3 |
| துருவங்கள் | - 2 |
| நட்பு | - 1 என்றும் ... என்றென்றும்... |



## அழகு

மலரின் அழகு மணத்தில்
விண்ணின் அழகு நட்சத்திரத்தில்
நாட்டின் அழகு அமைதியில்
உலகின் அழகு இயற்கையில்
குழந்தையின் அழகு சிரிப்பில்
மனிதனின் அழகு வாழ்க்கையில்
வாழ்க்கையின் அழகு நட்பில்...



பி.மைதிலி
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.

Scanned with CamScanner

## துயரம்

பூவாய் பிறந்தால் வாட வேண்டும்
பூமியாய் பிறந்தால் பொறுக்க வேண்டும்
நிலவாய் பிறந்தால் தேய வேண்டும்
நிஜமாய் பிறந்தால் மறைய நேரும்
மரமாய் பிறந்தால் மடிய நேரும்
மனிதனாய் பிறந்தால் வருந்த நேரும்

## பெருந்தொகை

கல்லூரிக்குச் செல்லும் போது தெரிந்தது
கலித்தொகையும் குறுந்தொகையும் போதாது
பெருந்தொகையும் வேண்டுமென்று



## CHEMISTRY

CHE - என்றெண்ணி
MIS - செய்து விடாமல்
TRY - செய்து படிக்க வேண்டியது CHEMISTRY


பி.மைதிலி
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.


## கற்பு

உலகத்தில்
கற்பின் விலை என்னவோ
உயர்ந்துதான் விட்டது
ஆனால்
மனசுகள் மட்டும்
மலிவாகிப் போனது



## நட்பு

முள்ளிருப்பதால் தான்
ரோஜாவுக்கு பெருமை
விட்டுக் கொடுப்பதால்தான்
நட்பிற்கு பெருமை...

## மனிதன்

சுற்றும் வரை
பூமி
சுடும் வரை
நெருப்பு
போராடும் வரை
மனிதன்
நீ மனிதன்



## ஹைக்கூ

அறையில் நல்ல வெளிச்சம்
உருகியது மெழுகுவர்த்தியின்
வாழ்வு...


மு.சூர்யபிரதா பி.எட்.,
ஆங்கிலத்துறை
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.


Scanned with CamScanner

## FRIENDSHIP

Friendship is like a rose
Because it is fragrance
Friendship is like a tree
To develop in it
Friendship is like a sweet
To taste in it
Friendship is like a ship
Sail in it.



## FEELINGS...

Think - "Gently"
Talk - "Simply"
Laugh - "Loudly"
Work - "Hardly"
Love - "Sincerely"
Feel - "Freely"

ம.சூர்யபிரதா பி.எட்.,
ஆங்கிலத்துறை

## வெற்றிக்கு வழி

தேய்ந்து கொண்டிருக்கும் சந்திரனும்கூட
ஒருநாள் பௌர்ணமி ஆகிறான்
தினமும் அஸ்தமனம் ஆகும் கதிரவனும் கூட
காலையில் புத்தெழுச்சியுடன் உதயமாகின்றான்
இன்று பூக்கும் மலர்கள் உதிர்ந்து விட்டாலும்கூட
பூச்செடி வாடாது மீண்டும் மொட்டுக்களை மலரச்செய்கின்றன



மனிதா நீ மட்டும் ஏன் தோல்வியை
கண்டு அஞ்சுகிறாய்? அஞ்சாமல்
தன்னம்பிக்கை கொண்டு முயற்சியுடன் செயல்படு வெற்றி
மாலையானது உன் கழுத்தினை அலங்கரிக்கும்

ச.சத்தியநாராயணன் பி.எட்.,
வரலாற்றுத்துறை
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.

Scanned with CamScanner

# பாலனின் வாழ்க்கையில் ஒரு நாள்



இருள் மெல்ல நகர்ந்து, பொழுது விடிந்தது. வழக்கம் போல ஏழை சிறுவனான பாலன் ஐந்து மணிக்கே படுக்கையை விட்டு எழுந்தான். அவனது குடும்பம் மிகவும் ஏழ்மையாக உள்ளதால் அவன் பள்ளி படிப்பை நிறுத்தி அன்றுடன் பத்து நாட்களாகின. அவனுக்கு படிப்பில் ஆர்வம் இருந்தாலும், அவனது குடும்பச்சூழல் அதற்கு முட்டுக்கட்டை போட்டது. பாலனின் பெற்றோர்கள் கூலி வேலை செய்து பெறும் வருமானம் அன்றைய தேவையைக் கூட பூர்த்தி செய்யாததால் பாலனை ஒரு பெரிய தொழிற்சாலையில் வேலைக்கு அனுப்பினார்கள். வேலை பளு குறைவு தான் என்றாலும் பாலனுக்கு அதில் விருப்பம் இல்லாததால் அடிக்கடி தவறு செய்து விடுவான், அதை விரும்பாத சில பேர் அவனை அடித்து விடுவார்கள்.

நேரம் ஆமைப்போல மெல்ல நகர்ந்தது. மணி சரியாக ஐந்து ஆனது. பாலன் தனது அன்றைய வேலையை ஓரளவிற்கு முடித்து விட்டு தொழிற்சாலையிலிருந்து வெளியே வந்து நடக்கத் தொடங்கினான். அந்த சாலையில் உள்ள சிறு, சிறு கற்கள் அவனது காலை வருத்தின. மாலை நேரம் என்பதால் பாலன் போன்ற சிறுவர்கள் பள்ளிகூடம் முடிந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தனர். பாலனுடன் படித்த ஒரு சிறுவனும் அக்கூட்டத்தில் வந்து கொண்டிருந்தான். பாலனை பார்த்தவுடன் அந்த சிறுவன் அதே இடத்தில் நின்றான். இருவரும் பேசத் தொடங்கினர்.

அந்தச் சிறுவன் பாலனைப் பார்த்து ஏன் பள்ளிக் கூடத்திற்கு வரமாட்டங்கிற என்று கேட்டான். அதற்கு பாலனோ சிறுபிள்ளைத் தனமாக எங்க அம்மா போக வேண்டாம் என்று சொன்னாங்க எனக் கூறினான். அதற்கு அச்சிறுவன் பதில் பேசாமல் வந்து கொண்டிருந்தான். பாலனின் வீடு வந்ததால் இருவரும் பிரிந்து வெவ்வேறு வழியில் சென்றனர். பாலன் வீட்டிற்குள் நுழைந்தான். அவன் அம்மாவும் அப்பொழுதுதான் கூலி வேலைக்குப் போய் விட்டு வந்து சமைக்க ஆரம்பிச்சாங்க பாலன் கையில் வைத்திருந்த சாப்பாட்டு வாளியை தன் அம்மாவிடம் கொடுத்தான். அவனது அம்மாவோ எங்கடா? சம்பளம் என்று கேட்க ஆரம்பிக்க, உடனே பாலன் மறந்துட்டேன் அம்மா என்று சொல்லிக் கொண்டே தனது கால் சட்டை பையில் கையை நுழைத்தான்.

பாலனுக்கு இரவு பதினோரு மணி ஆகியும் தூக்கம் வரவில்லை. அவனது சிந்தனையெல்லாம் தன் நண்பன் தன்னோடு பேசி வந்ததில் இருந்தது. அதையும் மீறி அவன் தூங்கிவிட்டான். மறுநாள் வழக்கம் போல வேலைக்கு போனான். அப்பொழுது அந்த வழியில் பாலனின் வகுப்பு ஆசிரியர் கணபதி வந்தார். பாலன் வணக்கம் ஐயா என்று சொல்லிக் கொண்டே அவர் முன்னே நின்றான். ஏண்டா? பள்ளிக் கூடத்திற்கு வரமாட்டங்கிற என்று கேட்கத் தொடங்கினார் பாலனின் ஆசிரியர். அதற்கு அவன் வழக்கம் போல தனது பெற்றோர்களையே காரணம் காட்டினான். அதற்கு அந்த ஆசிரியர் உன்னைப் போன்ற நன்றாகப் படிக்கும் மாணவர்கள் பள்ளிகூடத்திற்கு வராமல் இருப்பது தவறு என்று சொன்னார். சரி நாளைக்கு உங்க அப்பா, அம்மாவை வந்து என்ன பார்க்கச் சொல்லு என்று கூறி விட்டு அவர் சென்றார்.

Scanned with CamScanner

- இவன் நடந்ததை நினைத்துக் கொண்டே வேலைக்குப் போனான். மறுநாள் பாலனும், அவன் அம்மா, அப்பாவும் பள்ளிக் கூடத்திற்கு வந்தனர். அந்த ஆசிரியரைப் பார்த்தவுடன் அவனது பெற்றோர் இரு கை கூப்பி மரியாதையுடன் வணங்கினர். அவரும் பதிலுக்கு மரியாதை செலுத்தி பாலனைப் பற்றி பேசத் தொடங்கினார். அந்த ஆசிரியரிடம் தனது குடும்பச் சூழ்நிலை முழுவதையும் பாலனின் பெற்றோர்கள் விளக்கி கூறி அதனால் தான் அவனைப் பள்ளிக்கு அனுப்பவில்லை என்றனர்.

உடனே ஆசிரியர், இனி பாலனின் படிப்புச் செலவு முழுவதையும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றும், தினமும் பள்ளிக்குத் தவறாமல் அனுப்புமாறும் பாலனின் பெற்றோர்களிடம் கூறினார். பாலன் முகத்தில் மகிழ்ச்சி எல்லையற்றுக் காணப்பட்டது. அவன் மனம் முழுவதும் நாம் நன்றாகப் படித்து தனது பெற்றோர் மற்றும் ஆசிரியர் பெருமைபடும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. சிறு வயதிலேயே குழந்தைகளை வேலைக்கு அனுப்பக்கூடாது. அது சட்டப்படி குற்றம், அவர்கள் வருங்கால இந்தியாவின் தூண்கள் என்றெல்லாம் ஆசிரியர் கூறியதை உருக்கமுடன் கேட்ட பாலனின் பெற்றோர்கள் வெட்கத்துடன் தலை குனிந்தனர். பாலனின் வாழ்க்கையில் அந்த ஒரு நாள் அவனது மனதில் நிலைத்திருக்கும் என்றும், நாளையிலிருந்து பள்ளிக்கு வரலாம் என்ற நம்பிக்கையிலும் பாலன் அவனது பெற்றோருடன் சென்றான்.



**எம். கண்ணன்**
உயிரறிவியல்
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.

# பொது அறிவு வினா – விடை

1. வரலாற்றுச் சிறப்பு மிக்க தஞ்சை பிரகதீஸ்வர ஆலயம் எத்தனை அடி அஸ்திவாரத்தில் கட்டப்பட்டுள்ளது?

   **விடை :** வெறும் 6 அடிகளே ஆகும்.

2. சினிமா கலைத்துறையில் கொடுக்கப்படும் உலகின் மிக உயரிய விருதுதான் ஆஸ்கார் விருதை முதன் முதலில் பெற்ற இந்தியர் யார்?

   **விடை :** பானு ஆதித்யா



3. மன்னர் காலத்தில் கடற்படையில் சிறந்து விளங்கிய பரம்பரை எது?

   **விடை :** சோழப்பரம்பரை

4. எந்த ஆங்கில மாமன்னன், ஆங்கில மொழியில் பேசியதில்லை?

   **விடை :** முதலாம் ஜார்ஜ் மன்னன்

5. உலகில் முதன்முதலில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய நாடு எது?

   **விடை :** இத்தாலி

6. இஸ்லாமியர்கள் புனிதநூல் குரான், எத்தனை அதிகாரங்களைக் கொண்டது?

   **விடை :** 114 அதிகாரங்கள்

7. ஜீலியஸ் சீஸர் (Julius Caeser) என்ற ரோமானிய மன்னரின் நினைவாக வைக்கப்பட்ட ஆங்கில மாதம் எது?

   **விடை :** ஜீலை மாதம் (July)

8. இசை உலகில் புகழ் பெற்ற இரவி சங்கர் ஏற்றிய ராகம் எது?

   **விடை :** பரமேஸ்வரி ராகம்

9. சீனப் பெருஞ்சுவற்றின் நீளம் எவ்வளவு அதன் உயரம் யாது?

   **விடை :** 2,000 மைல்கள், 3219 கிலோமீட்டர், உயரம் 6 முதல் 15 மீட்டர் ஆகும்.

10. முதன் முதலில் மகளிர் கிரிக்கெட் போட்டியில், முதல் சதத்தைப் பூர்த்தி செய்தவர் யார்?

    **விடை :** சந்தியா அகர்வால்

11. உலக நீதிமன்றத்தில் எத்தனை தலைமை நீதிபதிகள் உள்ளனர்?

    **விடை :** 15 நீதிபதிகள்

12. உலகிலேயே துணிகளுக்கும், நகைகளுக்கும் பேர் பெற்ற சாலையின் பெயர் என்ன?

    **விடை :** பாண்ட் சாலை, லண்டன்.

தொகுப்புகள் :

**ச.சத்தியநாராயணன்** பி.எட்.,

வரலாற்றுத்துறை

Scanned with CamScanner

# அன்புள்ள அம்மா,

அம்மா எண்ணும் சொல் அழகிய அன்பின் வெளிப்பாடு. அம்மா என்று உங்களை அழைக்க ஆசைப்படுகிறேன். உங்களுடன் பழகிய இந்த அழகிய குறுகிய நாட்களை நினைக்கும் பொழுது அழகாய் மௌனமாய் சிறு சிறு சிதறல்கள் என்னுள் எதார்த்தமாய்ப் பேசி இணைந்தேன் உங்களுடன் என்றும் இணைந்தே இருப்பேன். அழகான உங்கள் மனம் போல உங்களைப் போலவே மிகவும் அழகாக உள்ளது.

Teacher என்று உங்களை சுற்றி வந்து பேசினேன் பழகினேன். வகுப்பில் நான் செய்த சிறு சிறு குறும்புகள் உங்களுக்கு இடையூறாக இருந்திருந்தால் மன்னித்து விடவும். ஆயுள் வரை அன்பிற்காகக் காத்திருப்பேன். தங்களுடைய திருமண ஓலைக்காகக் காத்திருப்பேன். என்னை வரும் நாட்களில் நீங்கள் சந்திக்கும் பொழுது. ஒரு பேராசிரியையாக இருப்பேன், என்றும் உங்கள் ஆசீர்வாதத்துடன் ஒரு சிறந்த தமிழ் ஆசிரியை ஆக, என் மனமார்ந்த வாழ்த்துக்கள். நான் கொடுத்த. கவிதைகள் அனைத்தையும் என்றும் நினைவாக பத்திரமாக வைத்திருக்க வேண்டும். அன்பான அழகான உங்களுக்காக சிறு கவிதை

## தோழியே

என் மனம் என்னும் கோட்டைக்குள்
பாசம் என்னும்
வாசல் வழி பார்த்து வந்த தோழியே
என்னை விட்டுப் பிரிந்து
செல்ல மனமில்லையா?
இல்லை, வந்த வழி மறந்ததா தோழி
தோழமை என்னும் உறவில்
பிரிவு என்னும் வார்த்தையை
வர விடாமல் வாழ்வோம்



என்றும் உங்கள் தோழி, மாணவி

கட்டுரை எழுத மிகவும்
உதவி செய்தீர்கள்
மிக்க நன்றி!

பி.சூர்யா,
எ.ரம்யா
எம்.சமயந்தி
எஸ்.பானுபிரியா
எஸ்.கமலேஷ்வரி

Scanned with CamScanner